பக்கங்கள் 14 + 5

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 06 ஞாயிற்றுக்கிழமை 22.09.2024 | அதிர்வு 52

## ஊரடங்குச் சட்டம் நண்பகல் நீக்கம்!

இலங்கையில் நேற்று இரவு 10 மணி முதல் இன்று நண்பகல் 12 மணி வரை அமுலில் இருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்



அநுரகுமார திஸாநாயக்க
56,34,915 வாக்குகள் (42.31%)



சஜித் பிரேமதாஸ
43,63,035 வாக்குகள் (32.76%)



ரணில் விக்கிரமசிங்க
22,99,767 வாக்குகள் (17.27%



நாமல் ராஜபக்ஷ
3,42,781 வாக்குகள் (2.57%)



பாக்கியசெல்வம் அரியநேத்திரன்
- 2,26,342 வாக்குகள் (1.70%)

### அநுரகுமார முன்னிலை வகித்தாலும்

# எவருக்கும் 50 வீத வாக்கு இல்லை; விருப்பு வாக்கு எண்ணல் ஆரம்பம்

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பு




இலங்கையில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இருந்தாலும், 50 வீத வாக்கை எவரும் பெறாத காரணத்தால் விருப்பு வாக்குகளை எண்ணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார். 03



# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிப்பு

**(பிரபாகரன் டிலக்சன்)**

"இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 3 இலட்சத்து 97 ஆயிரத்து 41 வாக்காளர்கள் தமது வாக்குகளைச் செலுத்தியுள்ளனர். இவற்றில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன."

– இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்டதில் அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலகருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பில் அறிவிக்கும் இன்றைய விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் அதிகபட்சமாக சஜித் பிரேமதாஸ 1,21,177 வாக்குகளையும், பா.அரியநேத்திரன் 1,16,688 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 84,558 வாக்குகளையும், அநுரகுமார திஸாநாயக்க 27,086 வாக்குகளையும், கே.கே. பியதாஸ 6,074 வாக்குகளையும், விக்டர் பெரேரா 1,178 வாக்குகளையும், விஜயதாஸ ராஜபக்ஷ 1,019 வாக்குகளையும், சரத் பொன்சேகா 901 வாக்குகளையும், நாமல் ராஜபக்ஷ 800 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர்." – என்றார்.

# முக்கிய அரசியல் பிரமுகர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம்

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதியில் நேற்று மாலை 6 மணி முதல் பலத்த பாதுகாப்பு இடப்பட்டுள்ளது. இலங்கை விமானப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் அரசியல் பிரமுகர்கள் பலர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே இந்தியாவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தாய்லாந்தின் பாங்கொக் நகருக்கும் சென்றுள்ளனர்.

இத்தேகந்தவின் சத்தாதிஸ்ஸ தேரர் ஹொங்கொங் சென்றுள்ளார் என்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் மனைவி திருமதி லிமினி வினோஜா வீரசிங்க மற்றும் அவரது தந்தை திலக சிறி வீரசிங்க ஆகியோர் இன்று டுபாய் சென்றுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து அமெரிக்காவுக்கான நேரடி விமான சேவைகள் இல்லாததால் அவர்கள் டுபாய் வழியாக அமெரிக்கா சென்றிருக்கலாம் என்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# தென் மாகாண ஆளுநர் இராஜிநாமா!

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராகப் பதவி வகித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கடந்த மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தென் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் இன்று தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

# 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் முதல் சுற்றில் வாக்கு எண்ணிக்கை

### கொழும்பு மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 6,29,963
* சஜித் பிரேமதாஸ - 3,42,108
* ரணில் விக்கிரமசிங்க - 2,81,436
* நாமல் ராஜபக்ஷ - 3,0,432

### கம்பஹா மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 8,09,410
* சஜித் பிரேமதாஸ - 3,49,550
* ரணில் விக்கிரமசிங்க - 2,16,028
* நாமல் ராஜபக்ஷ - 41,193

### கம்பஹா மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 3,87,764
* சஜித் பிரேமதாஸ - 2,36,307
* ரணில் விக்கிரமசிங்க - 1,43,285
* நாமல் ராஜபக்ஷ - 22,727

### யாழ்ப்பாணம் மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 1,21,177
* பா.அரியநேத்திரன் - 1,16,688
* ரணில் விக்கிரமசிங்க - 84,558
* அநுரகுமார திஸாநாயக்க - 27,086
* கே.கே.பியதாஸ - 6,074

### வன்னி மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 95,422
* ரணில் விக்கிரமசிங்க - 52,573
* பா.அரியநேத்திரன் - 36,377
* அநுரகுமார திஸாநாயக்க - 21,412

### திருகோணமலை மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 1,20,588
* அநுரகுமார திஸாநாயக்க - 49,886
* ரணில் விக்கிரமசிங்க - 40,496
* பா.அரியநேத்திரன் - 18,524
* நாமல் ராஜபக்ஷ - 2,183

### மட்டக்களப்பு மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 1,12,598
* ரணில் விக்கிரமசிங்க - 72,287
* அநுரகுமார திஸாநாயக்க - 34,151
* பா.அரியநேத்திரன் - 24,549

### அம்பாறை மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 2,00,384
* அநுரகுமார திஸாநாயக்க - 1,08,971
* ரணில் விக்கிரமசிங்க - 86,589
* பா.அரியநேத்திரன் - 9,985
* நாமல் ராஜபக்ஷ - 7,570

### கண்டி மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 3,94,534
* சஜித் பிரேமதாஸ - 3,23,998
* ரணில் விக்கிரமசிங்க -1,62,707
* நாமல் ராஜபக்ஷ - 19,403

### நுவரெலியா மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 2,01,814
* ரணில் விக்கிரமசிங்க - 1,38,619
* அநுரகுமார திஸாநாயக்க - 1,05,057
* நாமல் ராஜபக்ஷ - 8,821

### மாத்தளை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 1,40,544
* சஜித் பிரேமதாஸ - 1,21,803
* ரணில் விக்கிரமசிங்க - 53,829
* நாமல் ராஜபக்ஷ - 10,327

### பதுளை மாவட்டம்
* சஜித் பிரேமதாஸ - 2,19,674
* அநுரகுமார திஸாநாயக்க - 19,7,283
* ரணில் விக்கிரமசிங்க - 11,5,138
* நாமல் ராஜபக்ஷ - 13,869

### மொனராகலை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 1,40,269
* சஜித் பிரேமதாஸ - 1,34,238
* ரணில் விக்கிரமசிங்க - 35,728
* நாமல் ராஜபக்ஷ - 12,832

### இரத்தினபுரி மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,91,708
* சஜித் பிரேமதாஸ - 2,57,721
* ரணில் விக்கிரமசிங்க - 1,45,038
* நாமல் ராஜபக்ஷ - 20,575

### கேகாலை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,47,179
* சஜித் பிரேமதாஸ - 1,85,930
* ரணில் விக்கிரமசிங்க - 1,06,510
* நாமல் ராஜபக்ஷ - 11,722

### அநுராதபுரம் மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,85,944
* சஜித் பிரேமதாஸ - 2,02,289
* ரணில் விக்கிரமசிங்க - 82,152
* நாமல் ராஜபக்ஷ - 15,029

### பொலனறுவை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 1,30,880
* சஜித் பிரேமதாஸ - 1,00,730
* ரணில் விக்கிரமசிங்க - 36,908
* நாமல் ராஜபக்ஷ - 5,594

### குருநாகல் மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 5,44,763
* சஜித் பிரேமதாஸ - 3,68,290
* ரணில் விக்கிரமசிங்க - 1,46,520
* நாமல் ராஜபக்ஷ - 38,730

### புத்தளம் மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,07,134
* சஜித் பிரேமதாஸ - 1,73,382
* ரணில் விக்கிரமசிங்க - 60,719
* நாமல் ராஜபக்ஷ - 13,285

### காலி மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 3,66,721
* சஜித் பிரேமதாஸ - 1,89,555
* ரணில் விக்கிரமசிங்க - 1,07,336
* நாமல் ராஜபக்ஷ - 24,382

### மாத்தறை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,87,662
* சஜித் பிரேமதாஸ - 1,47,462
* ரணில் விக்கிரமசிங்க - 79,249
* நாமல் ராஜபக்ஷ - 14,962

### அம்பாந்தோட்டை மாவட்டம்
* அநுரகுமார திஸாநாயக்க - 2,21,913
* சஜித் பிரேமதாஸ - 1,31,503
* ரணில் விக்கிரமசிங்க - 33,217
* நாமல் ராஜபக்ஷ - 26,707

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஊரடங்குச்...

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இந்தத் தகவலை வெளியிட்டார்.

### எவருக்கும்...

அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோரைப் பிரதான வேட்பாளர்களாகக் கருதி விருப்பு வாக்கு எண்ணும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஏனையவர்கள் போட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போதைய நிலவரத்தின் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஆகியோரைத் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறிராத நிலையில், தேர்தல் விதிகளுக்கு அமைய, அவர்களுக்கான விருப்பு வாக்குகளை எண்ணி, அவற்றின் அடிப்படையில் அதிக வாக்குகளைப் பெறுபவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படவுள்ளார்.

இதற்கான நடவடிக்கைகளை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.



# ரோபோ தொழில் நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புப் போட்டி மட்டுவில்

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கிழக்கு மாகாண மட்ட ரோபோ தொழில் நுட்ப மற்றும் புதிய கண்டுபிடிப்புப் போட்டிகள் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் இடம்பெற்றன.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சஹீட் நெறிப்படுத்தலில் இந்தப் போட்டிகள் நடை பெற்றன.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நல்ல படிப்பினை இது!

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மும்முனைப் போட்டியாக அமைவதால் எந்த வேட்பாளரும் தனித்து ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகள் எடுப்பது சாத்தியமில்லை, அதனால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் முதல் தடவையாக இரண்டாம் சுற்று வாக்குக் கணக்கெடுப்பு இம்முறை தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று ஆரம்பம் முதல் எதிர்வு கூறப்பட்டே வந்தது. இப்பத்தியிலும் அதனை நாம் சுட்டிக் காட்டி வந்தோம். அதுவே இப்போது நடக்கின்றது.

எனினும் முதல் சுற்றில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான வாக்குகள் முன்னிலையில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க இருக்கையில், இரண்டாவது சுற்றுக் கணக்கெடுப்பில், அந்த எண்ணிக்கையை ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மேவி முன்னிலைக்கு வருவதற்கான சாத்தியம் மிகக் குறைவு என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும் இந்தத் தேர்தல் நமது அரசியல்வாதிகளுக்கு பல படிப்பினைகளை - பாடங்களை - போதித்து நிற்பது கண்கூடு.

முதலில் - ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், அவரின் கட்சியிலிருந்து பிரிந்து ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிய சஜித் பிரேமதாஸவும் தங்களுக்குள் முட்டி, மோதி, பிரிந்து நின்றமையால் இந்த வெற்றி அநுரகுமார திஸநாயக்கவுக்கு இலகுவாகச் சாத்தியமாகி இருக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தை நேரத்துடனேயே விளக்கமாகச் சுட்டிக்காட்டியே இருவரையும் ஒன்றித்துச் செயல்பட வைக்கும் பல முயற்சிகள் தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே உள்நாட்டிலும், சர்வதேச தரப்புகளினாலும் முன்னெடுக்கப்பட்டன. இருவருமே வீம்பும் பிடிவாதமும் பிடித்து, 'குரங்கிடம் அப்பம் பங்கிடக் கொடுத்து அதைப் பறிகொடுத்த மாதிரி' ஆட்சியை சிவப்பு அணியிடம் பறிகொடுத்து நிற்கின்றனர்.

அடுத்து - அறகலய போராட்டத்தை ஒட்டி மக்களினால் நிராகரிக்கப்பட்ட தற்போதைய நாடாளுமன்றத்தின் எம்.பிக்களின் எண்ணிக்கையை - ஆதரவை - காட்டித் தன்னிடம் அதிக வலிமையும் பலமும் இருப்பதாக கறுவிக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்த எம்.பிக்களின் பலம் யாது என்பது முதல் இரண்டு இடங்களுக்குள்ளும் தெரிவாகாமல் தாம் ஒதுக்கப்பட்ட போது நன்கு புரிந்திருக்கும் என நம்பலாம்.

மக்கள் மனதில் காலாவதியாகிப் போன நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களில் அநுரகுமார திஸநாயக்க நம்பி - தங்கி - இருக்கவில்லை. அந்த நாடாளுமன்றத்தில் அவரது கட்சிக்கு அவர் உட்பட மூன்றே மூன்று உறுப்பினர்கள்தான். ஆயினும் அரைக் கோடிக்கு மேல் வாக்குகளை மக்களிடமிருந்து அவரால் பெற முடிந்திருக்கின்றது.

ஏன் தமிழர் பிரதேசத்தில் - வடக்கிலும், கிழக்கிலும் - அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, வியாழேந்திரன், சந்திரகாந்தன் (பிள்ளையான்), காதர் மஸ்தான் மற்றும் திலீபன், அங்கஜன், சார்ள்ஸ் நிர்மலநாதன் என்று எம்பிக்களின் பட்டாளமே அவருக்கு ஆதரவாக இருந்தது.

ஆயினும் சுமந்திரன், சாணக்கியன், ரிஷாத் என்ற மூன்று எம்பிக்களின் ஆதரவுடன் வடக்கு, கிழக்கை சஜித் தரப்பு கைப்பற்றிக் கொண்டது.

மக்கள் மனதில் காலாவதியாகப் போன நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசியல் சமா நடத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் மனதை வென்று அரசியல் நடத்தாமல், அனைத்து விடயங்களிலும் தமது நரித்தனப் போக்கையே வெளிக் காட்டினார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கு ஆப்படிப்பதில் தொடங்கி, பொலிஸ்மா அதிபர் நியமனம் வரையான தனது பொறுப்புகளில் அரசியல் குசும்புத்தனம் பண்ணினார். அதன் பெறுபேறை இந்த தேர்தல் முடிவில் அவர் சந்திக்கின்றார்.

ஆனால் அவர் செய்த - செய்யாமல் விட்ட - பல குள்ளநரித்தனங்களுக்கான சட்டப் பரிகாரம் இனிமேல் தான் நீதிமன்றத்தில் அவருக்காக விசாரித்துக் கையாளப்படும். அது நிச்சயம்.



# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிரில் சூரிய மின் சக்திக் கருத்திட்டம்

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி வரலாற்றில் மற்றொரு மைல் கல்லை அடைந்துள்ளது.

பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத்தில் சூரிய மின் சக்தி திட்டம் கல்லூரி அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸிடம் கையளிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

பழைய மாணவிகள் சங்கத்தின் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளை முழு பாடசாலை சமூகமும் பாராட்டுவதுடன் இது சூழல் நட்பு மிக்க நிலைபேறான அபிவிருத்திக் கருது கோள்களை உருவாக்குவதை நோக்கி முன்னெடுப்பாகும்.



இந்த நிகழ்வில் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முசம்மில் மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவத் தலைவிகள் கலந்து கொண்டனர்.



# மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலைக்கு தொற்று நீக்கும் இயந்திரம் வழங்கி வைப்பு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலைக்கு பிராந்திய பணிப்பாளரால் தொற்று நீக்கும் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

தொற்று நீக்கும் இயந்திரத்தை மத்திய முகாம் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் கையளிக்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

இதன் போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் வைத்திய அதிகாரி டாக்டர் இசுறுவிடம் குறித்த இயந்திரத்தைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்துகொண்டார்.

வைத்தியசாலையின் தொற்று நீக்கும் இயந்திரம் பழுதடைந்ததால், பிற வைத்தியசாலைகளிலே தொற்று நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த விடயம் குறித்த வைத்திய சாலை அபிவிருத்திக் குழுவினரால் பணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதனையடுத்து பணிப்பாளரால் புதிய இயந்திரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பன்மைத்துவம், சமூக நீதி கொள்கை உங்கள் ஆட்சியின் போது ஓங்கட்டும்!

## அநுரவுக்கு மனோ வாழ்த்து!!

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் மும்மொழியிலும் மனோ எம். பி. தெரிவித்துள்ளதாவது,

மக்களின் ஆணையை பெற்று கொண்டீர்கள். வாழ்த்துக்கள் .

சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாம் கடுமையாக பணியாற்றிய மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா மாகாண வாக்காளர்களுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி நன்றியை தெரிவிக்கின்றது.

ஜனநாயக செயல்பாடு மிளிர்ந்துள்ளது. அநுரவின் வெற்றி, பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பம் என நம்புகிறேன்.

பன்மைத்துவம், சமூக நீதி கொள்கை உங்கள் ஆட்சியின் போது ஓங்கட்டும்.– என்றுள்ளது.

# ஹர்ஷ எம். பி. அநுரவுக்கு வாழ்த்து!

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ தி சில்வா, அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவரது எக்ஸ் தளத்தில் மேலும், " நாங்கள் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெற செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். ஆனாலும் நாட்டின் புதிய ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க தெரிவு செய்யப்படுவார் என்பது உறுதியாகியுள்ளது. எனவே, ஜனநாயக அடிப்படையில் அவரைத் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.












# கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப வளாகம் திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வளாகம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் தொழில்நுட்ப வளாகமானது, கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் முயற்சியில், த கேற் நிறுவன அனுசரனையுடன் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த வளாகத் திறப்பு விழாவில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி.உடவத்த பிரதம விருந்தினராகவும், உபவேந்தர் மற்றும் பணிப்பாளர்களுக்கான குழுவின் தலைவரும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சஞ்ஜீவனி கினிகத்தர மற்றும் இலங்கை வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இந்தத் தொழில்நுட்ப வளாகம் தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வருமானத்தை நிலைபேறானதாக மேம்படுத்தும் ஒரு காப்பகமாகவும் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# சம்மாந்துறை பத்திரகாளி அம்பாள் வருடாந்த தீ மிதிப்பு சடங்கு ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு வைபவம் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு இடம்பெற்று, ஒக்ரோபர் மாதம் 03 ஆம் திகதி தீ மிதிப்பு வைபவம் நிறைவு பெறவுள்ளது.

சம்மாந்துறை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் மற்றும் காரைதீவு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் பிரதம பூசகர் குமாரகுலசிங்கம் லோகேஷ் தலைமையில் சடங்கு இடம்பெறவுள்ளது .

தினமும் பகல் பூசை ஒரு மணிக்கும், இரவுப் பூசை 7 மணிக்கும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று என ஆலய பரிபாலன சபையின் தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார்.

26 ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாற்குடபவனி இடம்பெறும்.

முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முத்துச் சப்பரத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருவார்.

03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு இடம் பெற்று தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும் .

கூடவே அன்று அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

இறுதியாக 10 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு எட்டாம் நாள் வைரவர், இடும்பன் திருச்சடங்கு இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.



# ஆஸ்திரேலியாவில் 30 ஆவது தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

1994 ஆம் ஆண்டு சிட்னிப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க பட்டதாரிகள் குழுவினரால் தொடங்கப்பட்டு, தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் முப்பதாவது வருடமாக நடத்தப்பட்டு வருகிறது என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

புலம்பெயர் மண்ணில் எங்கள் மாணவர்கள் தமிழில் பேசவும் எழுதவும் ஊக்குவிக்கவும் தமிழ்மொழி என்றென்றும் நம் நாவிலும் இல்லங்களிலும் ஒலித்துக் கொண்டே இருக்கவும் இந்த பெரு முயற்சியை ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

### புலம்பெயர் மண்ணில் தாய்மொழி

புலம் பெயர் மண்ணில் எமது தாய் மொழியாகிய தமிழ் மொழியும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். அதே போன்று பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் என்றென்றும் மதிக்கப்பட வேண்டியவை. தமிழ்மொழி போன்ற உலகின் மூத்த மொழி நிச்சயம் பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும். அதனைப் பாது காப்பதற்கான வளமும், வலிமையும் இன்றைய சந்ததியுனரிலேயே தங்கியுள்ளது.

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்கும் தமிழ் மொழி, பல நூற்றாண்டுகளாக, பல்வேறு போர்களையும், பிறமொழித் தாக்குதல்களையும் எதிர்கொண்டு, சமாளித்து நின்று நிலைத்த எம் தாய் மொழி தொடர்ந்தும் அவ்வாறு நிலை கொள்ள வேண்டுமாயின், புலம் பெயர் மண்ணிலும் நிலைத்து நிற்க பெரும் பணிகள் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இத்தகைய செழிமையான பணியைத் தற்போது ஆஸ்ரேலியாவில் முப்பது ஆண்டுகளாகத் தொடரும் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சான்று பகர்கின்றன. ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றமை புலம்பெயர் மண்ணில் வரலாற்றுச் சாதனையாக அமைந்துள்ளது.

### ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்க பெரும்பணி

எதிர்கால சந்ததியினருக்குத் தேவையாய் அமையும் இந்தப் போட்டிகளில் தமிழ் இளையோர் பெருமளவில் பங்குபற்றித் தங்களின் தமிழ் ஆற்றலை வளர்த்து வருகின்றமைக்கு, ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் சேவை பாராட்டுதற்குரியது.







ஒவ்வொரு வருடமும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குகொள்வர். அத்துடன் இப்போட்டிகள் ஆஸ்திரேலியா, நியூசிலாந்தின் எல்லா மாநகரங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாநில மற்றும் தேசிய மட்டங்களில் நடத்தப்படுகின்ற இப்போட்டிகளின் பிரதான நோக்கமாவது தமிழையும் தமிழப் பண்பாட்டையும் பேணிக் காப்பாற்றுவதோடு எதிர்வரும் சந்ததிகளுக்கும் இவற்றை எடுத்துச் செல்லக் கூடிய தலைமைத்துவப் பண்புகள் நிறைந்த இளைஞர்களை உருவாக்குவதாகும்.

அத்தோடு எம் இளைய தலைமுறையினர் எந்நிலையிலும் தளராமல் உறுதியாக இருக்க வேண்டும் என்பதை அறிவூட்டும் வகையிலும்,தோல்விகளைக் கண்டு தளர்ந்து போகாமல், எதிர்த்துப் போராடக் கற்றுக் கொள்ள உத்வேகம் அளிக்கும் வகையில் இந்தப் போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

### மூன்று தசாப்தங்களை தாண்டி பயணிக்கும் சேவை

மூன்று தசாப்தங்களைத் தாண்டிப் பயணிக்கும், ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்க போட்டிகளில், தமிழை நேசிக்கும் தலைமுறைகளின் உருவாக்கத்துக்கு வழிசமைக்க, வருடந்தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.இது நவீன உலகு சவால்கள் நிறைந்ததாக உள்ளது. எமது தலைமுறையில் நாம் எதிர்கொண்ட சவால்களை விடவும் அதிக சவால்களை தற்போதைய தலைமுறை எதிர்கொள்கின்றது. சவால்களை சிறப்பாக எதிர்கொள்பவர்களே வாழ்க்கையில் வெற்றிகரமான மனிதர்களாக விளங்க முடியும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ள தமிழ்மொழி அறிவு இன்றைய தலைமுறைக்கு அல்லது அடுத்துவரும் தலைமுறைக்கு எந்த வகையில் உதவப் போகின்றது என்பதை கருத்தில் கொண்டு, ஆஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

### தமிழ் ஊக்குவிப்பு போட்டிகள் 2024

இவ்வருடமும் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் தமிழ் ஊக்குவிப்பு போட்டிகளில் பல நூறு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உலகமெங்கும் வாழும் பல்லாயிரக் கணக்கான இளையோரை “தமிழ்” உணர்வால் இணைத்த இந்த மகத்தான பயணத்துக்கு பட்டதாரிகள் தமிழர் சங்கம் மிக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.



# நாகர்கோவில் சமுத்திரத் தீத்தம் ஊரடங்குச் சட்டத்தால் இழுபறியில்

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய சமுத்திர தீத்த உற்சவம இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நாகர்கோவில் கடற்கரையில் இடம் பெற்றுள்ளது.

அதிகாலையில் 4 மணியளவில் ஆலயத்தில் வசந்த மண்டப பூசைகள் இடம் பெற்று 5 மணியளவில் சமுத்திரத்யில் சுவாமி தீர்த்தமாடுதல் வழமையாகும்.

நேற்றைய தினம் சனிக்கிழமை ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றுள்ள நிலையில் இரவு பத்து மணியிலிருந்து அதிகாலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் மருதங்கேணி பொலிஸார் நேற்று இரவு திருவிழாவை இடை நிறுத்தியிருந்தனர்.

இன்று காலை 6 மணியிலிருந்து ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் சமுத்திர தீர்த்தமாடுதல் நடத்தப்படுவதற்குஉபயகாரர்களால் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காலை 6 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ஆலய சமுத்திர தீத்த உற்சவ உபயகாரர்களால் நாகர்கோவில் கடலில் சமுத்திர தீத்தமாடுவதற்கு மருதங்கேணி பொலிசாரிடம் அனுமதி கோரப்பட்டது.

ஆனால் பொலிஸார் ஊரடங்கு உத்தரவைக் காரணம் காட்டியும், உபயகார்களில் சிலர் தீர்த்த உற்சவம் இடம் பெற்றால் முரண்பாடு ஏற்படும் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவித்து சமுத்திர தீத்தம் ஆடுவதற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஆலயத்தில் கூடியிருந்த உபயகார்கள், பக்தர்கள் பொலிஸாருடன் முரண்பட்டு சுவாமி சமுத்திர தீத்தம் ஆடும்வரை ஆலய சூழலை விட்டு அகலமாட்டோம் என்று தெரிவித்த நிலையில் காலை 8:30 மணியளவில் அனுமதி வழங்கப்பட்டது.

காலை 9 மணியளவில் நாகதம்பிரான், நாகர்கோவில்சமுத்திரத்திரத்தில் தீத்தமாடினார்.











# மிகவும் குறைந்த முறைப்பாடுகள் இம்முறை அம்பாறையில் பதிவாகின

## பவ்ரல் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சத்தியநாதன் தகவல்

**(வி.ரி.சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்ட தேர்தல் வரலாற்றில் மிகவும் குறைந்த 12 முறைப்பாடுகளே இம்முறை ஜனாதிபதி தேர்தலில் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பவ்ரல் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக தமிழர் பகுதிகளில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்களிப்பு வீதம் காலையில் குறைவாக காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.


அதேவேளை ஏனைய முஸ்லிம் சிங்கள பகுதிகளில் காலையிலேயே கூடுதலான மக்கள் வாக்களித்ததை காண முடிந்தது என்றார் .

பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் சேவைக்குடியிருப்பு பவ்ரல் சேவோ தலைமையகத்தில் போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு ஆரம்பமாகியது.

அதேவேளை பெரிய நீலாவணையில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரின் பிரசுரங்கள் விநியோகம் இடம்பெற்றதை நேரடியாக காணக்கூடியதாக இருந்தது. அதனைச் சென்று தடுத்திருந்தோம்.

அதேவேளை எமது குழுவினர் திருக்கோவில் பிரதேசத்திற்கு சென்ற பொழுது அங்கே தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் அகற்றப்படாமல் இருந்ததை அங்கே அவதானிக்க முடிந்தது.

எமது பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் சகல பகுதிகளிலும் சென்று தேர்தலை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்தனர் என்றும் தெரிவித்தார்.




# ஊரடங்கு நிலமையால் வெறிச்சோடிய கல்முனை

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

ஜனாதிபதி தேர்தல் நிறைவு பெற்ற பின்னர் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நிலமையைத் தொடர்ந்து கல்முனை மாநகரம் வெடிச்சோடிக் காணப்பட்டது.



# சர்வதேச சைகை மொழி தினம் நாளை

சைகை மொழி என்பது தெரியப்படுத்தும் தகவலை சைகை மூலம் மற்றவருக்கு காட்சிபடுத்துவது ஆகும். இவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என இத்தினம் வலியுறுத்துகிறது.

சர்வதேச சைகை மொழிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் 23 அன்று அனுசரிக்கப்படுகிறது.

காது கேளாதவர்கள் மற்றும் சைகை மொழிகளைப் பயன்படுத்துபவர்களின் மொழியியல் அடையாளத்தையும் கலாச்சார செழுமையையும் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் இந்த நாள் ஒரு சிறப்பு சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

2024 சைகை மொழி தினக் கொண்டாட்டத்தின் போது, சைகை மொழிகள் கொண்டுவரும் ஒற்றுமையை வலியுறுத்துவதில் கவனம் செலுத்தப்படும்.

உலகில் 7 கோடி பேர் காது கேளாதவர்களாக உள்ளனர். இதில் 80 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் உள்ளனர். இவர்களிடம் 300 விதமான சைகை மொழிகள் பயன்பாட்டில் உள்ளன. 1951 செப்ரெம்பர் 23 இல் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த நாளை அங்கீகரிக்கும் விதமாக இந்த நாளே சர்வதேச சைகை மொழி தினம் கடைபிடிக்கப்படுகிறது.

ஏ-ஆர்.ஈ.எஸ்.-72-161 என்ற தீர்மானம் ஆன்டிகுவா மற்றும் பார்புடாவின் நிரந்தர தூதரகத்தால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் 97 உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்றது. இது டிசெம்பர் 19, 2017 அன்று ஒருமித்த கருத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சைகை மொழிகளின் சர்வதேச தினத்தின் முக்கியத்துவம் பற்றிப் பார்க்கின்ற போது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை செப்ரெம்பர் 23 ஆம் திகதியைச் சர்வதேச சைகை மொழிகள் தினமாக அதிகார பூர்வமாக நியமித்துள்ளது. இந்த நினைவு நாள், காது கேளாத நபர்களின் மனித உரிமைகளை முழுமையாக உணர்ந்து கொள்வதை உறுதி செய்வதில் சைகை மொழியின் முக்கிய பங்கு பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்றைய நிலவரப்படி, 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச சைகை மொழிகள் தினத்துக்கான தீம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் சர்வதேச சைகை மொழிகள் தினத்தின் கருப்பொருளாக “எங்கும் காதுகேளாதவர்கள் எங்கும் கையெழுத்திடக் கூடிய உலகம்” !

உலகெங்கிலும் உள்ள காதுகேளாத சமூகங்கள், அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் தங்கள் நாடுகளின் பல்வேறு மொழியியல் நிலப்பரப்புகளின் ஒருங்கிணைந்த கூறுகளாக தேசிய சைகை மொழிகளை ஊக்குவிக்கவும் அங்கீகரிக்கவும் தொடர்ந்து இணைந்து செயல்படும். இந்த நாள் தகவல்தொடர்பு வசதி, உள்ளடக்கத்தை வளர்ப்பது மற்றும் காது கேளாத சமூகங்களின் தனித்துவமான கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில் சைகை




மொழிகளின் முக்கியத்துவத்தை நினைவூட்டுகிறது.

சைகை மொழிகள் இயற்கையான மொழிகள், காதுகேளாதவர்கள் தொடர்பு கொள்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.உலகம் முழுவதும் 300 இற்கும் மேற்பட்ட வெவ்வேறு சைகை மொழிகள் பயன் படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு சைகை மொழிக்கும் அதன் தனித்துவமான இலக்கணம் மற்றும் தொடரியல் உள்ளது. பேசும் மொழிகளைப் போலவே சைகை மொழிகளும் முக்கியமானது. அவர்கள் மதிக்கப்பட வேண்டும், காது கேளாதவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரம் உட்பட அவர்களின் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் தங்கள் சைகை மொழியைப் பயன்படுத்த உரிமை உண்டு.

இந்த தீர்மானம் சைகை மொழி மற்றும் தொடர்புடைய சேவைகளுக்கான ஆரம்ப அணுகலின் முக்கியத்து வத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. காதுகேளாத நபர்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் இத்தகைய அணுகல் அவசியம் என்று கருதப்படுகிறது. சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட வளர்ச்சி இலக்குகளை அடைவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

மொழியியல் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையின் ஒருங்கிணைந்த கூறுகளாக சைகை மொழிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் தீர்மானம் வலியுறுத்துகிறது. இது “நாம் இல்லாமல் நம்மைப் பற்றி எதுவும் இல்லை” என்ற கொள்கையை எடுத்துக்காட்டுகிறது .

காது கேளாதோர் சமூகங்களை அவர்கள் தொடர்பான முடிவெடுக்கும் செயல்முறைகள் மற்றும் முன்முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

**செ.அபிசேகன்,**
**ஊடகக் கற்கைகள்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# என் தாயின் வீடு அளவுக்கு உங்கள் கார் மிகப் பெரியது

## ஒபாமாவிடம் கூறிய பிரதமர் நரேந்திர மோடி

"என் தாய் வசிக்கும் வீடு அளவுக்கு உங்கள் கார் மிகப் பெரிதாக உள்ளது."

- இவ்வாறு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவிடம் பிரதமர் மோடி வெளிப்படையாக தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் முறையாக பிரதமர் பதவியேற்றது முதல் நரேந்திர மோடி பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இருதரப்பு உறவுகளை பலப்படுத்தி வருகிறார். உலக நாடுகளின் தலைவர்களுடன் வெளிப்படையாக பழகி நெருக்கமான முறையில் இந்திய உறவை மேம்படுத்தி வருகிறார். அப்படி அவர் வெளிநாடுகளுக்கு செல்லும் போது மத்திய வெளியுறவுத் துறை செயலர்கள், தூதரக அதிகாரிகள் பலர் உடன் இருக்கின்றனர். அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பிரதமர் மோடி எப்படி பேசினார், எப்படி செயல்பட்டார் என்று ஆச்சரியத்துடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

அந்த வகையில், கடந்த 2014 ஆம் ஆண்டு பதவியேற்ற பிறகு பிரதமர் மோடி அமெரிக்க பயணம் மேற்கொண்டார். அப்போது அவருடன் வெளியுறவுத் துறை செயலர் வினய் குவத்ரா சென்றுள்ளார். தற்போது அவர் அமெரிக்காவுக்கான இந்திய தூதராக உள்ளார். இந்நிலையில், 2014 ஆம் ஆண்டு பிரதமர் மோடி அமெரிக்கா சென்ற போது, அப்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவை சந்தித்தது குறித்து சமூக வலைதளத்தில் வினய் குவத்ரா கருத்து வெளியிடுகையில்,



"அமெரிக்கா வந்த பிரதமர் மோடி, அப்போதைய ஜனாதிபதி ஒபாமாவுடன் அலுவல் ரீதியாக பேச்சுவார்த்தை நடத்தி முடித்தார். அதன் பிறகு, இருவரும் மார்டின் லூதர் சிங் ஜூனியரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த புறப்பட்டனர். சுமார் 12 நிமிட பயண தூரத்தில் நினைவிடம் உள்ளது. அவர்களை அழைத்து செல்ல ஒபாமாவின் மிக நீளமான லிமோசின் கார் வந்தது. அதில் இருவரும் ஏறி அமர்ந்தனர். இருவரும் தங்கள் குடும்பத்தைப் பற்றி பேச தொடங்கினர்.

அப்போது, உங்கள் தாய் எப்படி இருக்கிறார்? என்று பிரதமர் மோடியைப் பார்த்து ஒபாமா கேட்டார். அதற்கு பிரிசிடெண்ட் ஒபாமா, நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். உங்களுடைய இந்த கார், என் தாய் வசிக்கும் வீட்டளவுக்கு உள்ளது என்று பிரதமர் மோடி சிரித்தபடி பதில் அளித்தார். இந்த பதிலை ஒபாமா சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவரும் பதிலுக்கு சிரித்தார். அதே நேரத்தில் பிரதமர் மோடியின் வெளிப்படைத் தன்மை, நேர்மை போன்றவற்றை ஒபாமா புரிந்து கொண்டார்."- இவ்வாறு வினய் குவத்ரா கூறியுள்ளார்.

அதே பயணத்தின் போது 1893 ஆம் ஆண்டு உலக மதங்கள் மாநாடு தொடர்பான அரிய புத்தகத்தை பிரதமர் மோடிக்கு ஒபாமா பரிசாக வழங்கினார். அந்தப் புத்தகத்தில் சுவாமி விவேகானந்தரின் உரையும் அடங்கியுள்ளது. பிரதமர் மோடி 3 நாள்கள் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள நிலையில், இந்தியதூதர் வினய் குவத்ரா கூறியுள்ள அனுபவங்கள் சமூக வலைதளத்தில் வைரலாகி உள்ளது.

# ம.நீ.ம. தலைவராக கமல் தேர்வு; செல்வப்பெருந்தகை வாழ்த்து

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக கமல் ஹாசன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டிருக்கும் நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம், அக்கட்சியின் தலைவர் கமல் ஹாசன் தலைமையில் நேற்று சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கில் நடைபெற்றது. அதில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக கமல்ஹாசன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டார். பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.


இந்நிலையில், இது குறித்து செல்வப்பெருந்தகை வெளியிட்டிருக்கும் வாழ்த்து செய்தியில்,


"மக்கள் நீதி மய்ய பொதுக்குழு கூட்டத்தில் கட்சித் தலைவராக கமல்ஹாசன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டிருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தேசிய பாரம்பரிய பின்னணியில் வந்த அவர் மதச்சார்பற்ற கொள்கைகளுக்கு ஆதரவாகவும், வகுப்புவாத சக்திகளுக்கு எதிராகவும் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதை



அனைவரும் அறிவார்கள்.

பொதுக்குழு கூட்டத்தில் ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு எதிராகவும், சாதிவாரி கணக்கெடுப்புக்கு ஆதரவாகவும், தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தாக்குதல்களை கண்டிக்கிற வகையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதை வரவேற்கிறேன். கமல்ஹாசன் அவர்களது அரசியல் பயணம் வெற்றிபெற தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.






# அமெரிக்கா, இஸ்ரேல் உளவாளிகள் இணைந்து ஈரானின் அணு ஆயுத திட்டத்தைத் தடுத்தனர்

கடந்த 2009 ஆம் ஆண்டில் ஈரானின் அணு ஆயுத திட்டத்தை இஸ்ரேலின் மொசாட்டும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்பும் சைபர் தாக்குதல் மூலம்தடுத்து நிறுத்தியது குறித்த தகவல் கள் வெளியாகி உள்ளன.

ஈரானின் இஸ்பகான் மாகாணம், நடான்சு நகரில் அணு சக்தி தளம் உள்ளது. அங்கு கடந்த 2009 ஆம் ஆண்டில் அணு ஆயுதங்களை தயாரிக்கும் முயற்சியில் ஈரான் விஞ்ஞானிகள் வெற்றியை நெருங் கினர். இதை தடுக்க அமெரிக்காவின் உளவு அமைப்பான சி.ஐ.ஏவும் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டும் இரகசியமாக திட்டமிட்டன. இதன்படி இரு நாடுகளின் உளவு அமைப் புகளும் இணைந்து ஸ்டக்ஸ்நெட் என்ற கணினி வைரஸை உருவாக்கின.

சைபர் தாக்குதலை தடுக்கும் வகையில் ஈரானின் நடான்சு அணு சக்தி தளத்தின் கணினிகள், இணைய இணைப்புகளில் இருந்து முற்றிலுமாக துண்டித்து வைக்கப்பட்டிருந்தன. இதனால் இணையம் வழியாக ஸ்டக்ஸ்நெட் வைரஸை நடான்சு அணு தளத்தில் ஊடுருவ செய்ய முடியவில்லை.

எனவே யு.எஸ்.பி. வழியாக ஈரானின் அணு சக்தி தள கணினியில் ஸ்டக்ஸ்நெட் வைரஸை பரப்ப சி.ஐ.ஏ, மொசாட் உளவாளிகள் முடிவுசெய்தனர். இதற்காக நெதர்லாந்தை சேர்ந்த இன்ஜீனியர் எரிக் என்பவரை இரகசிய உளவாளியாக நியமித்தனர். அவர் ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய் நகரில் உள்ள போக்குவரத்து நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அவரது மனைவி ஈரான் நாட்டை சேர்ந்தவர்.

எரிக் மூலமாக ஸ்டக்ஸ்நெட் வைரஸ் ஈரானில் பரப்பப்பட்டது. முதலில் நடான்சு அணு சக்தி தளத்தோடு தொடர்புடைய நிறுவனங்களின் கணினியில் ஸ்டக்ஸ்நெட் வைரஸ் யு.எஸ்.பி. வழியாக செலுத்தப்பட்டது. இந்த வைரஸ் ஒரு கணினியில் இருந்து மற்றொரு கணினிக்கு யுஎஸ்பி வழியாக பரவிக் கொண்டிருந்தது. ஈரானில் சுமார் 12,000 கணினிகளை கடந்து கடைசியாக நடான்சு அணு சக்தி தளத்தின் கணினியில் ஸ்டக்ஸ்நெட் வைரஸ் ஊடுருவியது.

சுமார் 12,000 கணினிகளில் அமைதியாக இருந்த ஸ்டக்ஸ்நெட் வைரஸ், நடான்சு அணு சக்திதளத்தில் கணினியில் புகுந்தபோதுவேலையை காட்டத் தொடங் கியது.யுரேனியத்தை செறிவூட்ட பயன்படுத்தும் சீமென்ஸ் நிறுவனத்தின் சென்ட்ரிப்யூஜ் உபகரணங்கள் தப்பும் தவறுமாக செயல்பட்டன. சுமார் 5 மாதங்கள் போராட் டத்துக்கு பிறகே ஈரான் இன்ஜினீயர்களால், ஸ்டக்ஸ்நெட் வைரஸை கண்டு பிடிக்க முடிந்தது. இதுதான் உலகின்முதல் சைபர் தாக்குதல் ஆகும்.

மொசாட்டின் உளவாளியாக செயல்பட்ட நெதர்லாந்து இன்ஜினீயர் எரிக் மர்மமான முறையில் உயிரிழந்தார். ஈரான் உளவாளிகள் அவரை கொலை செய்ததாக குற் றம் சாட்டப்படுகிறது.

இந்த வைரஸ் தாக்குதலால் ஈரான் விஞ்ஞானிகளுக்கு அணு ஆயுத ஆராய்ச்சியை முதலில் இருந்து தொடங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

# லெபனானில் பேஜர் தாக்குதலில் தொடர்புடைய 7 மொழி தெரிந்த பெண் சி.இ.ஓ. தலைமறைவு



லெபனானில் பேஜர் தாக்குதலில் தொடர்புடைய பி.ஏ.சி. கன்சல்டிங் நிறுவனத்தின் பெண் சி.இ.ஓ. கிறிஸ் டியானா பார்சோனி தலைமறைவாகி யுள்ளார்.

லெபனானில் சில தினங்களுக்கு முன்பு, ஹிஸ்புல்லா அமைப்பினர் பயன்படுத்திய 5,000 பேஜர்கள் திடீரென்று ஒரேநேரத்தில் வெடித்தது. இதில், 31 பேர் உயிரிழந்தனர் எனவும் ஆயிரக்கணக்கானோர் படுகாயம் அடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. இந்தப் பேஜர் தாக்குதலுக்கு பின்னால், இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் இருப்பது தெரியவந்தது.

இஸ்ரேல் உளவு அமைப்பின் கண்காணிப்பிலிருந்து தப்பிப்பதற்கு ஹிஸ்புல்லா அமைப்பினர் ஸ்மார்ட் போன்களுக்குப் பதிலாக பேஜர் பயன்படுத்தி வந்தனர். இதையறிந்த இஸ்ரேல் உளவுத் துறை ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில், பேஜர் தயாரிப்புக்காக 3 போலி நிறுவனங்களை தொடங்கியது.

அதில் ஒரு நிறுவனமான பி.ஏ.சி. கன்சல்டிங், தைவான் நாட்டின்கோல்ட் அப்பல்லோ நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து பேஜர்களை தயாரித்து வந்தது. இந்தப் பேஜர்களின் உட்பகுதியில் 3 கிராம் எடையுள்ள வெடிபொருள்கள் மறைத்து வைக்கப்பட்டன.

இந்நிறுவனத்திடமிருந்து ஹிஸ்புல்லா அமைப்பு 5 ஆயிரம் பேஜர்களை வாங்கியது. திட்டமிட்டபடி, மொசாட் அமைப்பு அந்தப் பேஜர்கள் அனைத்தையும் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்து தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில், பி.ஏ.சி. கன்சல்டிங் நிறுவனத்தின் பெண் சி.இ.ஓ. கிறிஸ் டியானா பார்சோனி தலைமறைவாகி யுள்ளார். கிறிஸ்டியானா இத்தாலியில் பிறந்து ஹங்கேரிக்கு புலம்பெயர்ந் தார். அவருக்கு 7 மொழி தெரியும் என்று கூறப்படுகிறது. அவர் எந்த ஒரு வேலையிலும் நிரந்தரமாக இருப்பவர் இல்லை என்றும் புதிய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர் என்றும் கூறப்படுகி றது.

பக்கங்கள் 05

# கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 22/09/2024

## அநாகரீகமான செயல்களில் ஈடுபட்டவரைத் தேடி வேட்டை

ஒன்றாரியோ, செப்ரம்பர் 22
கடந்த மாதம் ஓஷாவாவில் 'அநாகரீகமான செயல்களை' செய்தார் என்று கூறப்படும் சந்தேக நபரை டர்ஹாம் பொலிஸார் தேடி வருகின்றனர். 02▶



# ஒன்றாரியோ மாகாண அமைச்சர் பதவியினின்றும் மைக்கல் ஃபோர்ட் விடுப்பில் செல்வதற்கு முடிவு!

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 22**

**ஒன்றாரியோ மாகாண அமைச்சர் மைக்கல் ஃபோர்ட் அந்தப் பதவியில் இருந்து விடுப்பில் செல்லவுள்ளார் என அறிவித்துள்ளார்.**

**தனது உடல் நலத்தில் கவனம் செலுத்தும் வகையில் அமைச்சரவையில் இருந்து விடுப்பு எடுத்துக் கொள்வதாக மைக்கல் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.** 02▶

# வீட்டில் தீ! நால்வர் பலி!!

## டெமிஸ்கேமிங் ஷோர்ஸ் பகுதியில் சம்பவம்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 22
ஒன்ராரியோவின் வடக்குப் பகுதி வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழந்தனர்.

செப்ரம்பர் 19ஆம் திகதி இரவு இடம்பெற்ற இந்த தீ விபத்தில் வீட்டில் நான்கு பேரின் உடல்களை டெமிஸ் கேமிங் ஷோர்ஸ் பகுதியில் அவசர கால உதவி குழுவினர் கண்டு பிடித்தனர்.

இந்த சம்பவம் குறித்து ஒன்ராரியோ மாகாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

தமது விசாரணை ஆரம்ப கட்டத் தில் உள்ளதாக கூறும் பொலிஸார், இதனால் பொதுமக்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என தெரிவித்த னர்.






# மொன்றியலில் மசூதிக்குள் கத்தியுடன் நுழைந்தவரால் குழப்பம்; மூவர் காயம்

கியூபெக், செப்ரம்பர் 22

மொன்றியல் பகுதியில் உள்ள மசூதியில் கத்தியுடன் ஒருவர் நுழைந்தமையில் ஏற்பட்ட களேபரத்தில் மூவர் காயமடைந்த சம்பவம் நிகழ்ந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தொழுகையின் போது மசூதியில் கத்தியுடன் ஆயுதம் ஏந்திய ஒருவர் சென்றபோது அவரைத் தடுக்க முயன்ற மூன்று பேர் காயமடைந்தனர்.

மொன்றியல் புறநகர்ப் பகுதியான சேட்குவே என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

காயமடைந்த மூன்று ஆண்களும் 50 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அவர்களின் காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல எனவும் தெரிய வருகின்றது.

இவர்களில் ஒருவர் தனது காயத்துக்கு சிகிச்சை பெற மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார்.

இதில் சந்தேக நபரான 24 வயதுடைய ஆணைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவருக்கு எதிராக பதிவான குற்றசாட்டுகள் குறித்த விவரம் எதுவும் வெளியாகவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ காயமடைந்தவர்களுக்கு தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தால் ‘மிகவும் கவலை அடைவதாக’ கனடிய முஸ்லிம்களின் தேசிய அவை தெரிவித்துள்ளது.



## அநாகரீகமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது, ஒரு பெண் மற்றும் அவரது குழந்தை சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் அடங்கும்.

இருவரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி காலை 10:30 மணியளவில் ஹார்மனி சாலையில் உள்ள வால்மார்ட்டில் இருந்தனர் எனவும், நடந்து சென்ற போது, அடையாளம் தெரியாத ஒரு நபர் அவர்களைப் பின்தொடர்ந்து அநாகரீகமான பாலியல் செயலில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகிறது.

இதையடுத்து அந்த பெண்ணும் குந்தையும் கடையை விட்டு வெளியேறி பொலிஸாரைத் தொடர்பு கொண்டனர்.

சுமார் 30 நிமிடங்களுக்குப் பிறகு, பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கோல்ட்ஸ் ட்ரீம் டிரைவ் மற்றும் ஹார்மனி ரோடு வடக்கு பகுதியில் உள்ள பாடசாலைக்கு அருகே ஒரு பாதையில் நடந்து கொண்டிருந்தபோது, அதே ஆண் தன்னை நோக்கி நடந்து வருவதைக் கண்டார்.

பாதிக்கப்பட்ட பெண்ணிடம் தனது பிறப்புறுப்பை வெளிப்படுத்துவதற்கு முன்பு அவர் பாதையை சில முறை வட்டமிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது பாதிக்கப்பட்டவரை பாதையை விட்டு வெளியேறி பொலிஸாரை அழைக்க தூண்டியது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் காயங்கள் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றைய தினம் புலனாய்வாளர்கள் சந்தேகத்திற்குரிய நபரின் புகைப்படத்தை வெளியிட்டனர், அவர் ஒரு கறுப்பின ஆண் என்று வர்ணிக்கப்படுகிறார்.

## ஒன்றாரியோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபை உறுப்பினர் பதவியில் இருந்தும் விடுப்பு எடுத்து கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யோர்க் சவுத் - வெஸ்டன் தொகுதியின் மாகாணசபை உறுப்பினரான அவர், ஒன்ராரியோவின் குடியுரிமை, பல்கலாசார அமைச்சராக உள்ளார்.

இவர் மாகாண முதல்வர் டக் ஃபோர்ட்டின் மருமகனாவார்.

2022 ஜூன் மாதம் மாகாண சபை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், அந்த மாதத்தின் பிற்பகுதியில் அமைச்சராக பதவியை ஏற்றுக் கொண்டார்.

அவர் முன்னர் டொரன்டோ நகர சபை உறுப்பினராகவும் கல்விச் சபை அறங்காவலராகவும் பணியாற்றினார்.



# றிச்மண்ட் ஹில்லில் ஒருவர் உயிரிழப்பு சந்தேகத்தில் 23 வயது இளைஞர் கைது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 22

நேற்று காலை றிச்மண்ட் ஹில் லில் உள்ள வீடொன்றில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டமையை அடுத்து 23 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யோர்க் பிராந்திய பொலிஸார் காலை 8:25 மணியளவில் பேவியூ அவென்யூ மற்றும் எல்ஜின் மில்ஸ் ரோடு பகுதியில் உள்ள கிரேசிடேல் டிரைவ் மற்றும் ஷா∴ப்ட்ஸ்பரி அவென்யூவிற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் சோதனையை மேற்கொண் டனர்.

அதிகாரிகள் வீட்டிற்குள் நுழைந்த போது, ஒரு பெரியவர் இறந்து கிடந் துள்ளார்.

பிரேத பரிசோதனை முடிந்து உறவினர்களுக்கு அறிவிக்கப்படும் வரை பலியானவரின் அடையாளம் வெளி யி டப்பட மாட்டாது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

இதற்கிடையில், சந்தேக நபரை தேடத் தொடங்கிய பொலிஸார் அவர் ஹென்றி ஐ என்று அடையாளம் காட் டினார்.

அவரது புகைப்படத்தை வெளியிட்டு, அவரைக் கண்டுபிடிக்க பொதுமக்களி டம் உதவி கோரியிருந்தனர்.

ஆயினும் அன்று பிற்பகல் 3 மணி யளவில் அவர் கைது செய்யப்பட்டார்.






# பிரிட்டிஷ் கொலம்பியாவில் தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 22

பிரிட்டிஷ் கொலம்பியாவில் மாகாண கட்சித் தலைவர்கள் அதிகாரப்பூர்வமாக தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

சுகாதாரம், போதை, பொருளாதாரம் ஆகிய விடயங்கள் அவர்களுடைய தேர்தல் பிரசாரத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

லெப்டினன்ட்-கோவ். ஜேனட் ஒஸ்டின் 43 ஆவது மாகாணப் பொதுத் தேர்தலுக்கான ஆணையை சனிக் கிழமை வெளியிட்டார்.

இது அக்டோபர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஒரு நிலையான தேர்தல் திகதி இல்லாத நிலையில், தலைவர்கள் அதிகாரப்பூர்வமற்ற முறையில் வாரக் கணக்கில் பிரசாரம் செய்து வருகின் றனமை குறிப்பிடத்தக்கது.



# சுரங்கப்பாதை நிலையத்தில் திருட முயன்ற ஆசாமி கைது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 22

இரவோடு இரவாக சுரங்கப்பாதை நிலையத்தில் திருட முயன்ற 30 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை நள்ளிரவு 1 மணிக் குப் பிறகு யங் மற்றும் புளூர் தெருக்க ளுக்கு ஒரு கொள்ளைச் சம்பவம் பற்றிய புகாருக்காக தாங்கள் அழைக் கப்பட்டனர் என றொறன்ரோ பொலி ஸார் கூறுகின்றனர்.

ஒரு நபர் தண்டவாள மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப் பட்டார். சம்பவ இடத்தில் துப்பாக்கியும் மீட்கப்பட்டது.

கைது நடவடிக்கையின் போது அதிகாரி ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

அவருக்கு லேசான காயம் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.



# ஒன்றாரியோ சென் ஜோசப் வைத்தியசாலையில் முகக் கவசங்களை அணியுமாறு அறிவுறுத்தல்

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் சென் ஜோசப் வைத்தியசாலையில் முகக் கவசங்கள் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


கோவிட் 19 நோய்த் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன் எச்சரிக்கை அடிப்படையில் இவ்வாறு முகக் கவசங்களை அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வருகை தருவோருக்கு முகக் கவசங்கள் வழங்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த புதிய நடைமுறை பலருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் என்ற போதிலும் நோயாளிகளையும் சுகாதாரப் பணியாளர்களையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஏனைய சுகாதார பழக்க வழக்கங்களையும் ஊக்கப்படுத்தி அது வருவதாக தெரிவித்துள்ளது.




# ரொறன்ரோவில் கடைகளில் பாரிய அளவில் இடம்பெற்றுள்ள சில்லறைத் திருட்டுக்கள்!

## சந்தேக நபர்களுக்கு எதிராக 1500 குற்றச்சாட்டுக்கள்

ரொறன்ரோவில் கடைகளில் பாரிய அளவில் இடம்பெற்றுள்ள சில்லறைத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட அடிப்படையில் சுமார் ஆறு லட்சம் டொலர் பெறுமதியான விலை அதிகமான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

ரொறன்ரோ பெரும்பாக பகுதியில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

யோர்க் பிராந்திய பொலிஸார் இந்தச் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் இந்த ஆண்டு ஜூலை மாதம் வரையில் இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்ட அடிப்படையில் கடைகளில் புகுந்து திருடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருடப்பட்ட பொருள்கள் மீள விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபர்களுக்கு எதிராக 1538 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரொறன்ரோவைச் சேர்ந்த 46 வயதான நபர் ஒருவருக்கு எதிராக 154 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.